1970 மார்ச் 9]

Water supply scheme to Alandur Municipality.

* 273. Q.—THIRU K. VINAYAKAM: Will the Hon. the Minister for Education and Health be pleased to state—

(a) whether the Government of Tamil Nadu has sanctioned a scheme of drinking water-supply to the municipality of Alandur, Chingleput district; and

(b) if so, the estimate of that scheme?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: (அ) & (இ) ஆலந்தூர் நீர்வழங்கு திட்டத்தின் முதற் கட்டம் அமைப்பதற்கான மதிப்பீடு ரூ. 3.52 லட்சத்திற்கு 1969-ல் செப்டம்பர் மாதத்தில் அரசினரால் ஒப்புதல் வழங்கப்பட்டது.

திரு கே. விநயகம்: இந்தக் குடிநீர்த் திட்டம் அமுலுக்கு வருவதற்கு முன்னால் அந்தப் பகுதியில் சட்டசபை அங்கத்தினர் தன்னுடைய சொந்தச் செலவில் லாரி மூலம் குடி தண்ணீருக்கு வசதி செய்தாரே அது ஒரு சில நாட்கள் மட்டும் செய்யப்பட்டு பிறகு அதை விட்டுவிட்டதாகச் சொல்லப்படுகிறதே அது உண்மைதானா? உங்களுக்குத் தெரியுமா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, அது பற்றிய விவரம் இல்லை. தனிக் கேள்வி போட்டால் விவரம் சேகரித்துத்தரப்படும்.

தேசிய மலேரியா ஒழிப்புத் திட்டம்

* 274 வினா திரு. என். கிட்டப்பா: மாண்புமிகு கல்வி, சுகாதார அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தேசிய மலேரியா ஒழிப்புத் திட்டத்தினை தமிழகத்தில் எடுத்துவிடும் உத்தேசம் உள்ளதா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: இல்லை.

திரு. என். கிட்டப்பா: தலைவர் அவர்களே, தேசிய மலேரியா ஒழிப்புத் திட்டத்திற்காக நமது அரசுக்கு ஆண்டொன்றுக்கு ஆகும் செலவு எவ்வளவு? இந்தத் திட்டத்தினால் பயன் அடைந்த மக்கள் தொகை எவ்வளவு?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, மலேரியா ஒழிப்புத் திட்டம் ஒரு தேசியத் திட்டமாகக் கருதப்படுகிறது. 1959-60இல் இந்தத் திட்டம் துவங்கப்பட்டது. நான்கு கட்டங்களில் இந்தத் தேசிய மலேரியா ஒழிப்புத் திட்டம் நிறைவேறி வருகிறது. முதல் மூன்று கட்டங்கள் நிறைவேற்றப்பட்டு, நான்காவது கட்டத்தில் விஜிலென்ஸ் ஸெல் என்ற முறையில் அமைத்து மேலும் பரவாமல் தடுக்கும் அத்தகைய சூழ்நிலையில் அந்தத் துறையில் இருக்கிறவர்கள் ஈடுபட்டு வருகிறார்கள். 32 பகுதிகளாகப் பிரிக்கப்பட்டு பணியாற்றி வருகிறது. அதற்காக மொத்தம் செலவழிக்கப்பட்ட தொகையினுடைய விவரம் இங்கில்லை. தனிக் கேள்வி போட்டால் விவரம் சேகரித்துத் தரலாம்.

திரு. ஏ. ஆர். கருப்பையா : தலைவரவர்களே, இந்த தேசிய மலேரியா ஒழிப்புத் திட்டத்திற்காக மத்திய சர்க்கார் ஏதாவது நிதி உதவி செய்கிறதா ? அல்லது மாநில சர்க்காரே முழுப் பொறுப்பு ஏற்றுக் கொள்கிறதா ? இம்மாதிரித் திட்டத்தில் எத்தனை ஊழியர்கள் வேலை பார்க்கிறார்கள் ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, மத்திய சர்க்காரினுடைய உதவியும் இருக்கிறது. அதுபற்றி முக்கியமான குறிப்புகள் இங்கு இல்லை. தனிக்கேள்விபோட்டால் சொல்லலாம்.

திரு. என். எஸ். வி. சித்தன் : பேரவைத் தலைவரவர்களே, இந்தத் தேசிய மலேரியா ஒழிப்புத் திட்டத்தில் வேலை பார்க்கின்றவர்கள் தற்காலிகமாக வைக்கப்பட்டிருக்கிறார்கள். அவர்கள் நிரந்தரமாக்கப்படவில்லை. எந்த நேரத்தில் வேலையிலிருந்து நீக்கப்படுவோமோ என்ற அச்சம் அவர்களுக்கு இருக்கிறது. ஆகவே, அவர்களை நிரந்தரமாக ஆக்க அரசாங்கம் முன்வருமா ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, இந்தத்திட்டத்தில் தற்காலிகமாகத்தான் அவர்களுக்கு வேலை வழங்கப்பட்டது. ஏனென்றால் நான்காவது கட்டம் முடிந்தபிறகு அவர்கள் அத்தனைபேர்களுக்கும் நிலையான உத்தியோகம் கொடுக்க முடியாது. வேறுபல திட்டங்களுக்கு அதிலே பணிபுரிபவர்களை ஈர்த்துக்கொள்ள நடவடிக்கை எடுத்துக்கொள்ளலாம். அதுவரை நிலையாக வைத்தால், அந்தத்திட்டம் ஒழிக்கப்பட்டபிறகு அவர்களுக்கு வேலையில்லாமல் சம்பளம் கொடுக்க வேண்டி நேர்ந்தால் கணக்கு ஆய்வாளர் அதுபற்றிக் கேள்வி எழுப்பலாம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தேசிய மலேரியா ஒழிப்புத் திட்டம் என்பதை மலேரியா ஒழிப்புத் தேசிய திட்டம் என்று மாற்றிக்கொள்ளுங்கள்.

திரு. கே. விநாயகம் : என். எம். இ. புரோக்ராம் என்பது நாம் கொடுத்த பெயர் அல்ல. சென்ட்ரல் கவர்ன்மெண்டில் கொண்டு வந்தார்கள். நாம் மாற்றிக்கொள்ள உரிமை இல்லை. தலைவரவர்களே,

May I know how many persons were affected by the malaria disease before this programme was introduced in our State and the number of persons who died on account of it and also what is the progress so far made on account of the introduction of the scheme and is there any improvement?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, இந்தப்புள்ளி விவரங்கள் பற்றிய தகவல் இல்லை. தனிக்கேள்வி போட்டால் புள்ளி விவரங்கள் சேகரித்துத் தரலாம். ஆனால் ஒன்று மட்டும் நிச்சயம். மலேரியாவின் தன்மைகள் தேசிய மலேரியா ஒழிப்புத் திட்டத்தின் மூலமாக பெருவாரியான அளவில் இந்த மாநிலத்தில் அகற்றப்பட்டு விட்டது. இன்னும் சொல்லப்போனால்,

1970 மார்ச் 9]

இந்தியாவிலேயே எல்லா மாநிலங்களையும்விட மலேரியா ஒழிப்பில் தமிழகம்தான் முன்னணியில் இருக்கிறது, இந்தத் திட்டம் சிறப்பாக நிறைவேற்றப்பட்டது என்ற அத்தகைய குறிப்பு வந்திருக்கிறது.

திரு. சி. கோவிந்தராசன் : தேசிய மலேரியா ஒழிப்புத் திட்டத்தில் பணிபுரியும் தொழிலாளர்களுக்கு உடுப்புகள் வழங்கப்படுவதில்லை. அப்படி உடுப்புகள் வழங்கப்படாதபொழுது, சம்பளம் பெறும்பொழுது உடுப்புகளைப்போட்டுக்கொண்டு சம்பளம் வாங்க வேண்டுமென்று நிர்பந்திக்கப்படுகிறது அதிகாரிகளால். அது சரியா ? அந்த நிபந்தனைகள் கூடாது என்று அரசாங்கம் செய்யுமா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, அப்படிப்பட்ட முறையீடுகள் வந்தன. அதுபற்றிப் பரிசீலிக்கும்படி நான் துறையினரிடம் கூறியிருக்கிறேன். பரிசீலிக்கப்பட்ட பிறகு அந்த நிலைமைகள் பற்றி ஆராயப்படும்.

வேலை அடிப்படையில் கல்வித் திட்டம்.

* 275 வினு திரு. எஸ். அக்னிராஜு : மாண்புமிகு கல்வி சுகாதார அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வேலை அடிப்படையில் கல்வி போதிக்க திட்டம் ஏதாவது தமிழ்நாடு அரசு தயார் செய்து கொண்டிருக்கிறதா ?

(இ) ஆம் எனில், அதன் விபரமென்ன ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : (அ) இல்லை.

(இ) எழாது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினுக்கள் 235, 236, 276, 277, 278, 279 பிறகு எடுத்துக் கொள்ளப்படும்.

Stock of broken wheat in Government Godowns

* 280. Q.—Thiru N. S. V. CHITHAN : Will the Hon. the Minister for Food and Commercial Taxes be pleased to state :

(a) whether large stock of broken wheat has been piled up in Government Godowns in this State; and

(b) if so, the reasons thereof ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : (அ) & (இ) 3. 11. 1969 அன்றிருந்த நிலவரப்படி சென்னை மாநகர மண்டலக் கிடங்குகளில் 11 டன் அளவே கோதுமை நொய் இருந்தது. அந்த இருப்பு முழுவதும் தற்போது அனுப்பப்பட்டுவிட்டது.

Central Semen Banks.

* 281. Q.—Thiru A. M. RAJA : Will the Hon. the Minister for Food and Commercial Taxes be pleased to state whether there is any proposal to establish Central Semen Banks, for frozen semen of high yielding breeds of cattle?